R.Dis No:579/2023 Title Code No:TNTAM/24651

# திரை மொழி

THIRAI MOZHI TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

| மலர் : 01 | இதழ் : 08 | மார்ச் - 2024 | பக்கம்: 8 | விலை: ரூ. 10 |
| --- | --- | --- | --- | --- |
| Volume : 01 | Issue : 08 | March - 2024 | Page: 8 | Price: Rs. 10 |


மஞ்ஞும்மல் பாய்ஸ் Page 4

பெண்களுக்கு பாதுகாப்பானது திரையுலகம்” Page 6

ஏ.ஐ. எழுதிய குறள் Page 3

# மனதில் உறுதி வேண்டும்

## ஆஸ்கர் நாயகனை இயக்கிய இயக்குநர் ஸ்ருதி ஹரிஹர சுப்ரமணியன்



*What you seek is seeking you* நீ எது ஒன்றை தேடுகிறாயோ அது உன்னை தேடுகிறது

பிரபல தத்துவ ஞானி ரூமி அவர்கள் சொன்னதை தனது பேச்சில் அடிக்கடி மேற்கோள் காட்டும் இயக்குனர் ஸ்ருதி ஹரிஹர சுப்பிர மணியன் அவர்கள் 2002ல் மிஸ். சென்னை/மிஸ். Talentடாக தேர்வானவர்.

**"ஏ.ஆர். ரகுமானுக்கு டீ பாயாக இருக்கணும். மணி சாருக்கு குடை பிடிக்கணும் பிசி சாருக்கு லைட் பிடிக்கணும்"...** என்று சிறுவயதில் நகைச்சுவையாக தனது நண்பர் களிடம் கூறியது போலவே திரைத் துறைக்கு வந்த பின்னர் அந்த கனவு களை நனவாக்கியவர் இவர்.

தொடர்ச்சியாக இயக்குனர் சிகரம் கே பாலசந்தரின் இயக்கத்தில் **சஹானா** என்று தொடரிலும், இயக்குனர் நாகா இயக்கத்தில் **சிதம்பர ரகசியம்** என்று தொடரிலும் நடித்த பின்னர், நூற்றுக் கணக்கான விளம்பர படங்களில் நடித்தும், உருவாக்கியும் தனது திரைத் துறை பயணத்தை தொடங்கினார்.


தொடர்ச்சியாக பல ஆண்டுகள் உதவி இயக்குனராக இயக்குனர் திருமதி. ரேவதி, திரு. விஷ்ணுவர்தன், திரு, விக்ரம் குமார் உள்ளிட்ட பலருடன் பணியாற்றிய அனுபவத்துடன் 2015ல் ஆவணப்பட இயக்குனராக உருவெடுத்தார். *A Far Afternoon* **என்ற ஆவணப்படத்திற்காக 63 வது ஆண்டு தேசிய திரைப்பட விழாவில், சிறந்த இசை மற்றும் கலை கலாச்சாரம் பிரிவில் இரண்டு ரஜத் கமல் (தேசிய விருது) விருதுகளை வென்றார்.**

பிறகு, ஆஸ்கர் நாயகன் ஏ.ஆர். ரகுமான் அவர்களை வைத்து HAR MONY WITH AR RAHMAN என்ற டாக்கு சீரிஸ் ஆவண படத்தை உருவாக்கி அதில் வெற்றியும் கண்டார்.

இயக்குனர் மணிரத்னம் அவர்கள் இயக்கி வெளிவந்த பொன்னியின் செல்வன் திரைப்படத்தின் ப்ரோமோ டைரக்டராக இரண்டு (PS1, PS2) பாகங்களுக்கும் பணியாற்றியுள்ளார்.

ஒரு இயற்கை ஆர்வலரான இவர், கோலிசோடாஸ்டோர்.காம் (https://golisodastore.com/) என்று இயற்கை சார்ந்த பொருட்கள் விற்கும் தொழில் முனைவராகவும், சினிமாவை பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ள அரிய தகவல்களை கொண்ட The Cinema Re source Centre என்ற ஒரு அமைப்பையும் நடத்தி வருகிறார்.

திரை மொழி சார்பில் அவரை **உலக மகளிர் தினத்தை ஒட்டி சிறப்பு நேர்காணல்** செய்த போது நம்மிடம் பகிர்ந்து கொண்ட சுவாரசிய தகவல்கள் சில இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.




**கேள்வி:** ஆஸ்கர் நாயகனை இயக்கிய அனுபவம் குறித்து?

**பதில்:** நாம தான் அவர் ஆஸ்கர் நாயகன், *larger than life Person* ன்னு பிரமிப்பா பார்க்கிறோம். ஆனா அவர் கிட்ட பழகினப்ப தான் தெரிஞ்சது ரொம்ப இயல்பான, நட்பான, நகைச் சுவையான, sensitiveவான மனிதர்ன்னு.. அவரோட இந்த இயல்புகளை எப்படியாவது நாம பண்ற டாக்கு மென்டரியில கொண்டு வரணும்னு முடிவு பண்ணி, கொண்டு வந்தேன்.

**கேள்வி:** ஏ ஆர் ரகுமான் அவர் களோட பல்வேறு லொகேஷன்கள்ல சூட் பண்ணி இருக்கீங்க அந்த *journey* குறித்து சுவாரஸ்ய தகவல்கள் சொல்லுங்க..

**பதில்:** சிக்கிம், மணிப்பூர், இப்படி இன்னும் சூட்டிங் நடக்காத பல பகுதிகளில்ல கஷ்டப்பட்டு தான் ஷூட்டிங் பண்ணினோம். ரகுமான் சார் எப்பவுமே சுத்தி இருக்கறவங்கள நல்லா புரிஞ்சுக்கறதுனால எங்களுக்கு ரொம்ப ஒத்துழைச்சாரு.

ஷூட்டிங் எல்லாம் முடிஞ்சு சீக்கிரம் டாகுமெண்டரியை முடிச் சாகற மாதிரி ஒரு டெட்லைன் எனக்கு கொடுத்தாங்க. அப்ப சார் UKல இருந்தாரு. அவரு சாங் அனுப்பி நான் ஷூட் பண்ணனும். அப்ப அவர் சொன்ன அட்வைஸ்... **“..ஒன்னு ஞாபகம் வச்சுக்கோ... ஒரு இயக்குனரா நமக்கு டென்ஷன் இருக்கும், பிரஷர் இருக்கும் ஆனா நம்ம ஆர்ட் (படைப்பு) ஒன்ஸ் வெளி உலகத் துக்கு போயிடுச்சுன்னா, திருப்பி சரி பண்ண முடியாது.. அதனால கொடுக்குறத நமக்கு திருப்தியான**



பிறகு தான் கொடுக்கணும்... “இத நான் பாலோ பண்றேன்.






கேள்வி: ப்ரோமோ டைரக்டரா பொன்னியின் செல்வன் வாய்ப்பு எப்படி கிடைச்சது?

பதில்: *What you seek is seeking you*ன்னு நான் அடிக்கடி சொல்லுற மாதிரி திடீர்னு ஒரு நாள் மணி சார் ஆபீஸ்ல இருந்து போன் வந்தது.. பொன்னியின் செல்வன் படத்துக்கு ப்ரோமோ டைரக்டரா ஒர்க் பண்ணனும்னு.. நிறைய விஷயம் என் வாழ்க்கையில நடந்த மாதிரி இதுவும் அமைஞ்சது. ஆபீஸ்ல போய் மணி சாரை பார்த்தப்ப, *Harmony, I liked it very much*ன்னு பாராட்டுனாரு, ப்ரோமோ டைரக்சன் நான் பண்ணினதில்லன்னு சொன்னப்ப நீ *harmony* பண்ணின மாதிரி இதையும் பண்ணு.. அந்த குவாலிட்டி தான் எனக்கு தேவைன்னு சொன்னாரு..



அவர் ஒரு நல்ல பிரின்ஸ்பல் மாதிரி.. இது மூலமா அவர்கிட்ட நாம கத்துக்க்கலாம்ன்னு நான் அதை பண்ணினேன்.

கேள்வி: இந்த ப்ரோமோவில் ரஜினி, கமல் போன்ற ஜாம்பவான்களை இயக்கியது குறித்து..

பதில்: உண்மையிலேயே எனக்கு ரொம்ப டென்ஷனா தான் இருந்துச்சி.. இதை கரெக்டா பண்ணனும்னு.. ஏன்னா ரஜினி சாருக்கும், கமல் சாருக்கும் ஏகப்பட்ட *fan followers*... நம்ம பண்ற ப்ரோமோ மூலமா அவங்களுக்குள்ள எதுவும் கருத்து வேறுபாடு வந்து விடக்கூடாதுன்னு ரொம்ப கவனமா இருந்தேன். அவங்க ரெண்டு பேருக்கும் நிறைய படங்கள் இருந்துச்சு.. நான் அவங்க நடிச்ச மணி சார் படத்தை மட்டும் எடுத்து வொர்க் பண்ணினேன்.. இந்த ப்ரோமோ பாத்துட்டு அவங்க ரசிகர்களிடம் ஏகப்பட்ட ரெஸ்பான்ஸ்.. அப்பதான் நாம சரியா பண்ணி இருக்கோம் அப்படிங்கற திருப்தி வந்துச்சு



கேள்வி: மணி சார் கிட்ட நீங்க என்ன கத்துக்கிட்டீங்க?

பதில்: அவருக்கு யாரு கிட்ட என்ன வாங்கணுங்கறத தெரிஞ்சி வச்சிருந்தாரு... அவர் எதாவது கரெக்ஷன் சொல்ற மாதிரி இருந்தா கூட நம்மள யோசிக்க வச்சு அவர் நினைச்சத வாங்கிடுவாரு...



கேள்வி: யாவரும் நலம் படம் ஒர்க் பண்ணி இருக்கீங்க.. அந்த எக்ஸ்பீரியன்ஸ்...

பதில்: நான் *AD*யா ஒர்க் பண்ண ஃபியூச்சர் ஃபிலிம் அதுதான். டயலாக் *version*ல இருந்து ரிலீஸ் வரைக்கும் ரொம்ப இன்வால்வ்மெண்டோட வொர்க் பண்ணினேன். பிசி சாரோட ஒர்க் பண்ணது கூடுதலான சந்தோஷம். யாவரும் நலம் படம் முடிந்த பிறகு கூட *PC*சார் என்ன ரொம்ப *encourage* பண்ணுவாரு..

கேள்வி: *KB* சார் .. சஹானா சீரியல்ல வாய்ப்பு அமைஞ்சது எப்படி?

பதில்: காலேஜ் முடிச்சுட்டு சினிமா கத்துக்கணும்னு சாரோட ஆபீசுக்கு போயிட்டு வருவேன். அப்ப மின்பிம்பங்கள் சீரியல் நடந்துகிட்டு இருந்தது.. அப்படி நான் போய்க்கிட்டு இருந்தபோது ஒரு நாள் திடீர்னு மேனேஜர் கால் பண்ணி *KB* சார் உன்னை நடிக்கறதுக்காக வர சொல்லி இருக்காருன்னு சொல்லவும், நான் பேரன்ட்ஸ் கிட்ட அனுமதி வாங்கி அப்பாவோட ஆபீஸ்க்கு போயிருந்தேன்.. **தூரத்தில் இருந்து என்னை பார்த்த அவர் இந்த பொண்ணு நடிச்சிடும் சொல்லிட்டு போயிட்டாரு.. பிறகு நான் சூட்டிங் ஸ்பாட்ல தான் அவரை பார்த்தேன்...** அந்த ரோல் சுகாசினி மேடம் சிந்து பைரவில பண்ணினது.. *similar* நான் பண்றதா அமைச்சிருந்தாங்க.. *Inter cut*ல் சுகாசினி மேடம் ஷாட்டும், என் ஷாட்டும் வரும்.. அந்த வகையில அது ஒரு ஹானரா எனக்கு இருந்தது.

கேள்வி: **நீங்க ஒரு ஆக்டரா கேமரா முன்னாடி நிக்கறது.. ஒரு டைரக்டரா கேமரா பின்னாடி நிக்கறது எது உங்களுக்கு ரொம்ப புடிச்சிருக்கு? ஏன்?**

பதில்: **உண்மையான சுருதி கேமராவுக்கு பின்னாடி தான் இருக்கா.. ஒரு கிரியேட்டரோட வலி எனக்கு ரொம்ப பிடிக்கும்..**

கேள்வி: *A Far Aftenoon documentary* ஷூட்டிங் எக்ஸ்பீரியன்ஸ் பத்தி...

பதில்: எனக்கு சினிமா எக்ஸ்பீரியன்ஸ் இருந்ததால ஒரு ஹீரோவுக்கு கொடுக்கிற இண்ட்ரொடக்ஷன் மாதிரி, கை, கால், கண் காட்டுவது மாதிரி ஷாட் வச்சு *Krishen Khanna* அவர்களை இண்ட்ரொடக்சன் பண்ணினேன். குட்டியா ஒரு மாண்டேஜ் சாங் வச்சேன்.. *back drop*க்கு தகுந்த மாதிரி காஸ்டியூம் அமைச்சுருந்தேன்.. வழக்கமா டாக்குமென்டரிக்கு அப்படி பண்ண மாட்டாங்க.. ஆனா, சினிமா மாதிரி ஃபீல் பண்ணி பண்ணினேன். டாக்குமெண்டரினாவே எல்லாரும் *BORE*ன்னு சொல்லுவாங்க.. அதிகமா தகவல்கள் கொடுக்காமல் எமோஷன நான் *connect* பண்ணினேன்.

கேள்வி: ரேவதி மேடம் பற்றி...

பதில்: அவங்ககிட்ட நான் *em pathy* கத்துக்கிட்டேன்.. அவங்க அப்ப பிஸி *artist*ட்டா இருந்தாங்க.. டைரக்டர்னு ஆகும்போது செட்ல இன்வால்வ்மென்டோட எல்லா வேலையும் அவங்க செஞ்சாங்க.. அந்த இன்வால்வ்மெண்ட்ட அவங்க கிட்ட இருந்து நான் கத்துக்கிட்டேன்..

கேள்வி: வயல்வெளியில் இருந்து விண்வெளி வரை இன்று பெண்கள் பயணிக்கின்றனர். சினிமாவில் அதிகம் இல்லாமல் இருப்பது ஏன்?

பதில்: சினிமா தொழிலுக்கு முழு நேர அர்ப்பணிப்பு தேவைப்படுறதுனால நிறைய பெண்கள் இதுல வர்ற கொஞ்சம் யோசிக்கறாங்கன்னு நினைக்கிறேன். ஆண் பெண் என வேறுபாடு இல்லை.. பொதுவாக எல்லாருக்கும் இது கஷ்டமான இண்டஸ்ட்ரிதான். உடல்வலிமையை விட, மனவலிமை அதிகம் இருந்தால் தான் இங்கு ஜெயிக்க முடியும்.

So, **சினிமாவுல இருக்கணும்னா மனதில் உறுதி வேண்டும்.!!!**

இயக்குநர் ஸ்ருதி ஹரிஹர சுப்ரமணியன் சினிமாவில் வெற்றிகரமாக பயணிக்க திரைமொழிக்குழு வாழ்த்துகிறது.

இதன் முழு வீடியோ வடிவம் திரைமொழி *Talkies youtube* தளத்தில் உள்ளது.

**உங்கள் கருத்துக்களை வரவேற்கிறோம்!**

கருத்துக்களை அனுப்ப வேண்டிய மெயில் ID:

thiraimozhinews@gmail.com

9500074478 | 9566153766

# நாகேஷ் பேரன் பிஜேஷ்ன் புதிய படம்



திரைப்பட கல்லூரி மாணவரும் 'டு'' படத்தின் இயக்குனருமான ஸ்ரீராம் பத்மாபனின் இரண்டாவது படத்தின் படப்பிடிப்பு இனிதாக நிறைவு பெற்றது.

இப்போது படத்தின் டப்பிங் வேலைகள் நடந்து வருகிறது.

**நமது திரைமொழிக்காக படத்தினை பற்றி இயக்குனர் ஸ்ரீராம் பத்மனாபன் கூறியதாவது:**

படத்தின் பெயர் விரைவில் பெரிய நடிகர் மூலம் வெளியிடப்படும்.

இந்த படத்தில் மறைந்த நடிகர் நாகேஷ் சார் அவர்களின் பேரனும், நடிகர் திரு. ஆனந்த்பாபு அவர்களின் மூத்த மகன் பிஜேஷ் நாகேஷ் கதாநாயகனாக நடித்துள்ளார்.

இவருடன் அக்ஷயா என்பவரை கதாநாயகியாக அறிமுகம் செய்து உள்ளோம். இவர்களுடன் தீபா அக்கா, லொள்ளு சபா ஜீவா, நாஞ்சில் விஜயன், லொள்ளு சபா உதயா, பேபி வர்ஷா, ஆதேஷ்பாலா, சிவகுரு, ராம்ராஜ், வெடிக்கண்ணன், எஸ்.எல். பாலாஜி மாஸ்டர், என பலர் நடித்து உள்ளனர்,

இவர்கள் தவிர சிறப்பு வேடத்தில் நாமக்கல் விஜயகாந்த், ஜுனியர் டிஆர் நடித்துள்ளனர்.

**பகல்வேஷம் என்ற கலை ஒரு காலத்தில் மிகவும் சிறப்பு பெற்றது. அதில் ராமர், ஆஞ்சநேயர் வேடமிட்டு கலை புரிந்தனர் அந்த கலை அழிந்ததும் இன்று சிலர் மட்டும் தனியாக ஆஞ்சநேயர் வேடமிட்டு கோவில், வீடு, கடைகள் என சுற்றி வருகின்றனர் அப்படிப்பட்ட ஒரு வேடத்தில் நமது கதாநாயகனும், அவருடைய வாழ்க்கையும், அவருக்கும் அவரது குழந்தைக்கும் உள்ள உறவையும் அழுத்தமாக சொல்லும் படமாக இது வந்துள்ளது.**

நாட்டில் அதிகம் நல்ல மனிதர்கள் கொட்டி கிடக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல மனிதர்களை படம் முழுக்க காட்டியுள்ளேன். படம் முழுதும் ஒரு பாசிடிவ்விட்டி இருக்கும். நகைச்சுவை, காதல், நட்பு, மனித நேயம்

என அனைத்தையும் இந்த படத்தில் கலந்து கொடுத்துள்ளேன்.

ஒரு நல்ல கதையம்சம் உள்ள படத்தை பார்த்த திருப்தி மக்களுக்கு ஏற்படும் வகையில் கமர்ஷியல் கலந்து கொடுத்துள்ளேன்.

இந்த படத்தின் ஒளிப்பதிவு நிரன் சந்தர், இசை ஷாஜஹான்,

எடிட்டிங் வித்துஜீவாவும் செய்கிறார்கள்.

**இயக்குனர் சங்கம், பெங்களூர் இன்னொவ்வேட்டிவ் பிலிம் அகாடமியுடன் இணைந்து நடத்திய இன்டர் நேஷனல் பிலிம் பெஸ்டிவலில் குறும்பட போட்டி பிரிவில் எங்கள் டீம் எடுத்த “சாய்பும் நானும்” என்ற குறும் படம் சிறந்த ஒளிப்பதிவு பரிசு பெற்று கேன்ஸ் பட விழாவில் போட்டி வரை சென்றது.**

இப்போது நாங்கள் எடுக்கும் இந்த திரைப்படத்தை **ஆரஞ் பிக்சர்ஸ் சார்பில் திரு. ராஜேஷ் பத்மனாபன் அவர்கள் தயாரிக்கிறார்.**

படத்தின் மற்ற வேலைகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது என இயக்குனர் தெரிவித்தார்.

படம் வெற்றி பெற திரைமொழி சார்பாக வாழ்த்துக்கள்.






மரக்கிளையிலிருந்து சறுக்குவது போல கனவு கண்டு, மொட்டைப் பாறையில் விழுவதற்கு முன் திடுக்கிட்டு விழித்து, நான் என்னுடைய கடைசி ஸ்லைடை உருவாக்கிய போது அதிகாலை மணி 3.30. எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர் களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு. அவர்களுக்கு ஏ.ஐ எப்படி உபயோகப்படும் என்பதை விளக்கு வதற்காக என்னை அழைத்திருந்தார்கள். காலையில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கருத்தரங்கு. அதே தினம் மாலையில் புதிய தலை முறைக்காக **"சக்தி விருதுகள்"** நிகழ்ச்சியை இயக்கும் பொறுப்பு. ஒரே இரவில் இரு வேலைகளுக்கான தயாரிப்பு என்பதால், த்ரிஷா, ஜான்விகபூர் வந்து சென்ற கனவு கலந்த விழிப்புடன், அதிகாலை பால்பாக்கெட் விநியோகம் விரைவாக வந்துவிட்டது.

எனக்கு முன்னால் அரை மணி நேரம் பேசுவதாக இருந்த **மனுஷ்ய புத்திரன்** வருவதற்கு தாமதமானவுடன் முதலில் என்னிடம் மைக்கை தந்துவிட்டார்கள். முப்தொன்றாவது நொடியில் சுதாரித்து தலைப்புக்குள் வந்துவிட்டேன். தலைப்பு டிஜிட்டல் தூரிகை!

**கண்ணிய நுண்ணறிவு கருவியாகும்**
**கருத்தறிந்து கையாளுவார் கைம்மண்**

என்ற குறளுடன் ஸ்லைடை ஒளிரவைத்தேன். இது எந்தக் குறள்? எந்த அதிகாரத்தில் உள்ளது? என எல்லோருக்கும் குழப்பம். அதனால் நானே தெளிவாக்கினேன். **அது திருவள்ளுவர் எழுதிய குறளே அல்ல. அது ஜெமினி ஏ.ஐ எழுதிய குறள். சரியாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தினால் ஏ.ஐ வழியாக புத்தகங்களும், காப்பியங்களும் எழுதலாம்** என்றும் அட்டைப் படங்களை உருவாக்கலாம் என்றும் புரிய வைத்தேன். சிலர் மிகச் சிரத்தையாக நான் சொல்லச் சொல்ல குறிப்பெடுத்துக் கொண்டார்கள். டீ பிரேக் எப்போ என்ற கேள்வி எவர் முகத்திலும் இல்லை. அந்தக் குஷியில் மனுஷ்ய புத்திரன் பாணியில் எழுது என்று **ஜெமினி ஏ.ஐக்கு நான் கொடுத்த கட்டளைகளையும், அது எழுதிய கவிதைகளையும் காண்பித்தேன்.**

**உன்னை காதலிப்பதில் தவறென்ன? உன்னை கனவு காண்பதில் தவறென்ன? நீ எனக்கு காதலி, என் தோழி நீ எனக்கு தாய், என் சகோதரி நீ எனக்கு எல்லாமே**

இப்படி ஆரம்பித்து அது எழுதிய நீண்ட கவிதையைப் பார்த்து மனுஷ்யபுத்திரன் வியந்து விட்டார்.

நான் குறிப்பிட்ட சில வார்த்தைகளை நான் திரும்பத் திரும்ப பயன்படுத்துவேன். அந்த பாணியை இந்த ஏ.ஐ பின்பற்றி யிருக்கிறது என்று பாராட்டினார்.

**எனக்கடுத்து கிஸ்புளோ** (Kiss flow) **நிறுவனர் சுரேஷ் சம்பந்தம் பேசினார். அவர் பேசியதின் சுருக்கத்தை அடுத்த ஐந்து வருடங்களுக்கான திட்டமாக நாம் வரித்துக் கொள்ளலாம்.**

தொழில், அறிவியல், வேளாண்மை, கம்ப்யூட்டர், மருத்துவம் வரிசையில் அடுத்து உலகப் பொருளாதாரத்தை தீர்மானிக்கப்போவது செயற்கை நுண்ணறிவு என்றார். *Especially Entertainment Economy will be the next big thing*, என்றார். அதாவது செயற்கை நுண்ணறிவின் பாதிப்பால் சினிமா, தொலைக்காட்சி, வலைத்தளங்கள், பதிப்பகம் உள்ளிட்டவற்றில்

> தொடர்ச்சி பக்கம் 8ல்







# தமிழகத்தை கலக்கும் மலையாள

# மஞ்ஞும்மல் பாய்ஸ்

ஒரு படத்தை கொண்டாட ஒன்றிரண்டு சிறப்புகள் இருக்கும். ஆனால் ஒரு மலையாளப் படம் ஒட்டு மொத்த தமிழ்நாட்டு திரையரங் கங்களிலும் வெற்றி நடைபோட்டு வருகிறது என்றால்; அதன் சிறப்பு களை ஆராயமல் இருக்க முடியுமா?

**இயக்குநர் சிதம்பரம் பொடுவால் இயக்கத்தில் திரையரங்குகளில் வெளி யாகி நல்ல வரவேற்பை பெற்று வரு கிறது 'மஞ்ஞும்மல்பாய்ஸ்' திரைப் படம். சவுபின் ஷாயிர், ஸ்ரீநாத் பாஸி, பாலு வர்கீஸ், காலித் ரஹ்மான் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப் படம் 2006ம் ஆண்டு கேரளா எர்ணா குளத்தை சேர்ந்த மஞ்ஞும்மல் பகுதியிலிருந்து சிஜு, சுபாஷ் ஆகியோர் தங்கள் நண்பர்களுடன், தமிழகத்தின் கொடைக்கானலுக்கு சுற்றுலா சென்றுவரும்போது சந்தித்த நிஜ அனுபவத்தை நம் கண்முன்னே காட்டுகிறது.**

ஜாலியாக சுற்றுலா செல்லும் இந்த பாய்ஸ் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரகம் என்றிருக்க, செட்டில் மூத்தவராக வரும் சவுபின் ஷாயிர் (படத்தில் சிஜூ கதாபாத்திரம்) என்கிற பொறுப்புடன், அமைதியையே தன் அனுபவ மொழியாக, அனைவரையும் ஒருங் கிணைப்பதையே தனது பொறுப் பாகவும் கொண்டிருக்கிறார். தன் பொறுப்பில்லாத விடலை தம்பியை தன் வயதான அம்மாவை விட்டு எங்கேயும் வர முடியாது என சொல்லும் ஸ்ரீநாத் பாஸியை (படத் தில் சுபாஷ் கதாபாத்திரம்) நட்பின் உரிமைகொண்டு நம்பிக்கை கொடுத்து சுற்றுலாவுக்கு அழைத்து செல்கிறார் சவுபின் ஷாயிர். பழனியில் இறங்கி முருகனை முழுமையாக தரிசித்துவிட்டு அங்கு குணா பட பாடல் சிடியை வாங்கி காரில் போட்டு கண்மணி அன்போடு காதல் பாடலுக்கும் குணா குகைக்கு மான தொடர்பை நினைவுபடுத் திக்கொண்டும் குணா குகைக்கு ஆர்வத்துடனும், எதிர்பார்ப்புடனும் செல்கின்றனர். ஆனால் அடாவடி யான இந்த நண்பர்கள், ஒரு கட்டத் தில் தடைசெய்யப்பட்ட குணா குகைக்குள் செல்ல, அங்கு சுபாஷ், இமைக்கும் நொடியில் இடறி விழுவதோ குணா குகையின் 120 அடி ஆழ குழியில். அதிர்ச்சிக்கும் அழுகைக்கும் உள்ளாகும் நண்பர்கள் அருகில் இருந்த தமிழ்பேசும் எளிய வியாபாரியிடம் (ஜார்ஜ் மரியன்) சென்று கதறி அழ, அவரோ பதறிப் போய் அந்த குகையின் ஆபத்தை அவசரமாவிளக்கி, அவர்களைவிரட்டு கிறார். அவருடைய கடையில் வேலை செய்யும் இளம்பெண் (விஜயலட்சுமி) அவர்களுக்கு உதவச்சொல்லி கோர, பின்னர் நாலு எலிமிச்சை பழத்தை எடுத்துக்கொண்டு உதவிக்கு ஓடு கிறார்.

இன்னொருபுறம் டூரிஸ்ட் கைடு (ராம்ஸ்), அங்கிருக்கும் ஃபோட்டோ கிராபர் அனைவரும் ஆதங்கத்துடன் வர, போலீஸ்காரர்கள் கோபத்துடனும் எரிச்சலுடனும் வருகின்றனர். ஆனால் குழியில் விழுந்த நண்பன் சுபாஷ் உயிருடன் இருக்கிறானா என தெரிய வில்லை. அடுத்த நெருக்கடியாக மழை பொழிய, குழிக்குள் மழை நீர் புகுவதை தங்கள் உடலால் அணைக் கட்டி தடுத்து அன்பு நண்பனை காக்க முயல்கின்றனர் மஞ்ஞும்மல்பாய்ஸ். இறுதியில் நண்பனை உயிருடன் மீட்டார்களா? உடலையாவது மீட்டார் களா? என்பதுதான் இந்த சர்வைவல் த்ரில்லர் கதை!

சுஷின் ஷ்யாமின் பின்னணி இசை திரைக்கதைக்கு பலம் என்றால், இளையராஜாவின் இசையில் உருவான **'கண்மணி அன்போடு காதலன்' (குணா) பாடல் படத்துக்கு பலம்.** குணா குகை ஒரு செட் என்றே தெரியாத அளவுக்கும் கலை இயக்குநர் அஜயன் சாலிசேரி தன் கலையில் மிரட்டி யிருக்கிறார். கலை இயக்குநரின் பணியை வீண்பண்ணா மல், தமது ஒலி வடிவமைப்பால் அதன் திகைப்பை பதிய வைத் துள்ளது ஒலித்துறை. சந்தான பாரதி இயக் கத்தில் கமல் நடித்த 'குணா' திரைப் பட படப்பிடிப்புக்கு பின்பு **'குணா கேவ்' எனப் பெயர் மாற்றம் அடைந்த இந்த குணா குகைக்கு, 1821ல் அமெரிக்காவைச் சேர்ந்த பி.எஸ். வார்டு வைத்த பெயர் 'டெவில்ஸ் கிச்சன்' (சாத்தானின் சமையலறை) என்றும்,** இதுவரை இந்த குகை பல உயிர்களை குடித்துள்ளதாகவும், அதன் பிறகே கண்டிப்பான எச்சரிக்கைகளுடன் அந்த இடம் தடைசெய்யப்பட்ட இட மாக மாறியதாகவும் ஆளுக்கொரு தகவலை சொல்கின்றனர். குறிப்பாக மந்திரி மகன் ஒருவர் அந்த குகைக்குள் விழுந்தபோது இறந்த தன் மகனுக்கு சடங்கு செய்ய அவனது எலும்பை கொண்டுவந்தால் கூட 15 லட்சம் தருவதாக அறிவித்தும், பணத் துக்காக பிணத்தை தோண்டி எடுக்கும் அனுபவம் வாய்ந்தவர்கள் கூட அதை செய்ய முன்வரவில்லை என்றும் அந்த குணா குகையின் வரலாற்றை மஞ்ஞும்மல்பாய்ஸிடம் சொல் கின்றனர். இப்படி ஒரு குழியில் ஒருவர் விழுந்தால்.. என்கிற ஒன் லைனே நமக்கு பதட்டத்தை உண்டு பண்ணி, படம் நெடுக பார்க்க தயார் படுத்தி விடுகிறது. அதோடு சேர்ந்து கொள் கிறது என்ன ஆபத்தாக இருந்தாலும் சரி, நண்பனை மீட்டுக் கொண்டு தான் செல்வோம் என்கிற மஞ்ஞும்மல்பாய்ஸின் உறுதியும் ஒற்று மையும்.

ஒரு கட்டத்தில் குழிக்குள் இறங் கிதான் சுபாஷை மீட்கவேண்டும் என்கிற நிலை வர, அனைவரும் பின்வாங்க, குழிக்குள், தான் இறங்கு வதாக சவுபின் ஷாயிர் முடிவெடுக் கிறார். குழிக்குள் இறங்கி சுபாஷை ரிஸ்கியூ பண்ணும் ரிஸ்கை எடுக்கும்போது நடிப்பால் கவனம் ஈர்க்கும்போதும், நண்பனின் தாயை பார்க்கும்போது வெளிப்படுத்தும் குற்றவுணர்ச்சியின் போதும், இறுதியில் கட்டியழும் அவரிடம் தம் நெகிழ்ச்சியை வெளிப்படுத்தும் போதும் **எதார்த்த நடிப்பில் பின்னி யிருக்கிறார் சவுபின் ஷாயிர். அதே போலவே சுபாஷாக வரும் ஸ்ரீநாத் பாஸி மென்மையான கவிதை போல் வலம் வரும்போதும், குகையை பார்த்து விடவேண்டும் என்கிற துடுக்குத் தனத்தின்போதும், குழிக்குள் சிக்கி மரணத்தருவாயின் கடைசிநொடியை கையில்பிடித்துக் கொண்டு வலியில் அலறும்போதும் பார்வையாளரின் ஒட்டுமொத்த அனு தாபத்தையும் ஒரு வராய் பெறு கிறார். சுபாஷ் உயிர் பிழைத்த பின்னர், "சாவ பாத்துட்டு வந்தவன் கடவுள் மாரி"** என சொல்லி காலில் விழுந்து மூதாட்டி ஆசிபெறும் போது யாருய்யா இந்த நிஜ

சுபாஷ் இப்படி இடறி விழுந்து இடரில் சிக்கி உயிருடன் மீண்டிருக் கிறார் என அனைவரின் ஆச்சரியக் கூச்சலுக்கும் சொந்தக்காரர் ஆகிறார்.

பால்யத்தில் இருந்து ‘ஒரே குட்டை யில் ஊறிய மட்டைகளாக’ மலரும் இந்த மஞ்ஞும்மல்பாய்ஸின் கதை ஒருபுறம் காட்டப்பட்டுக்கொண்டே வருவதும், குழியில் தவித்துக் கொண்டிருந்த சுபாஷின் பால்யம் முதல் தற்காலம் வரையிலான கதை யும், அவனது பாதிப்புக்குள்ளான மனநிலையும் உளவியல் வடிவம் பெற்று இன்னொருபுறம் வலம் வரு வதும் இயக்குநரின் திரைமொழி.

ஆரம்பத்தில் இருந்தே கயிறு இழுக்கும் போட்டியில் சில நுணுக் கங்களை கற்றுத்தேர்ந்து விளை யாண்டு வந்த மஞ்ஞும்மல்பாய்ஸ், தமிழக தீயணைப்புத்துறைக் காவலர் கள் சோரும்போது, அந்த கயிறை ஓடிச்சென்று மஞ்ஞும்மல்பாய்ஸ் ஓடிச்சென்று பிடித்து, தங்களுக்கே உரிய ஸ்டைலில் கையாண்டு, சுபாஷை ரிஸ்கியூ பண்ணுவது மாஸ் மொமண்ட். காயத்துடன் கூடிய சுபாஷை சிஜூ தன்னுடன் கட்டிக் கொண்டு நண்பர்களின் உதவியுடன் குழியில் இருந்து மேலே வரும்போது ‘உண்டான காயமெங்கும் தன்னாலே மாறிப்போன மாயமென்ன’ என்கிற வரிகளில் கண்மணி அன்போடு பாடல் தொடர, அப்படியே கையில் தூக்கிக் கொண்டு கண்ணீர்ப்பெருக்கெடுத்து நண்பர்கள் ஓடுவது மெலோடி மொமண்ட்.

முதலில் ஒத்துழைப்பு தர மறுத் தாலும் பின்னர் தமிழக காவல் துறை, தீயணைப்புத்துறை, வனக்காவலர் கள், ஃபோட்டோகிராபர் அனைவருமே, ‘நம்மள நம்பி வரும் மலையாள பசங்களுக்கு நாமதான் உதவனும்’ என ஜார்ஜ் மரியன் சொல்வதை கேட்டு ஒத்துழைப்புதரும் காட்சிகள் நெகிழவைக்கின்றன. படத்தில்வரும் இந்த வசனம் உண்மையிலும் பொருந்தும். ஆம், ஒரு மலையாளப் படத்தின் திரைக் கதையில், ராம்ஸ், ஜார்ஜ் மரியன், விஜயமுத்து, விஜய லட்சுமி ஆகிய பாதிக்கும்பாதி தமிழக நடிகர்கள் (குறைவான எண்ணிக் கையில் இருந்தாலும்), தங்கள் பாத் திரப்படைப்பை திறம்பட கொடுத்து சப்போர்ட் செய்திருக் கின்றனர்.

மஞ்ஞும்மல்பாய்ஸ் கேங்கில் உள்ள அனைத்து கேரக்டர்களையும் மனதில் பதியவைத்திருக்கலாம். காப் பாற்றச் செல்லும் சிஜூவுக்கும் காப் பாற்றப்படும் சுபாஷ்க்குமான உறவோ, முரணோ எதுவாயினும் அதை கூர்தீட்டியிருக்கலாம். 10 பேருக்கு மேல் பயணம் செய்யும் வண்டியை கேரளா போலீஸ் நிறுத்தி குடைச்சல் கொடுத்து கொடைக் கானலுக்கு அனுப்பி அதன் பின்னர் தமிழ்நாடு போலீஸின் அக்கறை யில்லாத அலட்சியப்போக்கை காண் பித்திருக்கலாம். அப்போது எல்லா ஊர் போலீஸூம் இப்படித்தான் என்கிற உண்மை புலப்பட்டிருக்கும். விதிமீறல் செய்யும் மஞ்ஞும்மல்பாய்ஸ் கவிதையாகவும், அதனால் கடுப்பாகும் காவல்துறையினர் குரூரமாகவும் காட்டி யிருப்பதை சேட்டன்ஸ் கொஞ்சம் பேலன்ஸ் பண்ணிருக்கலாம். குறிப் பாக, சுபாஷை மீட்டு சொந்த 'நாட்டுக்கு' புறப்படும்போதும் மஞ்ஞும்மல் பாய்ஸ்க்கும் போலீஸ்க்குமான நன்றி நவிலும் காட்சிகளை வைத்து இந்த மெலோ டிராமா கதையை இன்னும் மெருகேற்றியிருக்கலாம்.



இயக்குநர் சிதம்பரம் பொடுவால்

**நிஜ பின்னணியில் இந்த குழியில் விழுந்த எர்ணாகுளத்தைச் சேர்ந்த சுபாஷ் குறித்து 10 ஆண்டுகளுக்கு முன்னர் ரஞ்சித் ஜனார்த்தனன் எடுத்த ஆவணப்படத்தில் தன் அனுபவத்தை கூறிப்பிட்டுள்ள சுபாஷ் உண்மையில் உறைபனிக் குளிருடன் குணா குகை யில் சிக்கிக்கொண்டபோது ஒரு பிரீசர் பெட்டியில் மாட்டிக்கொண்டது போல இருந்ததாகவும், வௌவால் களின் இறக்கைகள் படபடவென தம்பட்டம் அடிக்கும்போது சாவை தன் கண்முன் பார்த்ததாகவும், தனக் கான ஒரே ஆறுதல் மேலே இருந்து கேட்ட தனது நண்பர்களின் குரல்கள் மட்டும்தான் என குறிப்பிட்டுள்ளார்.** ஒரு வெற்றிகரமான திரைக்கதையாளராக வர வேண்டுமென்று லட்சியத்துடன் இருக்கும் சுபாஷின் வாழ்வில் நடந்த சம்பவமே இப்போது வெற்றிகரமான திரைப்படமாக மாறும் என அவரே எதிர்பார்த்திருக்க மாட்டார். அதை **எளிமையான திரைமொழி,** விறுவிறு திரைக்கதையுடன் இயக் கியுள்ள இயக்குநர் சிதம்பரம் பொடுவாலுக் கும் மஞ்ஞும்மல் படக்குழுவுக்கும் பாராட்டுகள்.



**சிவசங்கர்**
**பாடல் - திரைக்கதை ஆசிரியர்.**



தொடர்புக்கு
நிர்வாக ஆசிரியர் N.மூர்த்தி
9500074478







தமிழ் அகம் ஒரு நடுநிலை ஊடகம்
தொடர்புக்கு : 9467 208 208




# பெண்களுக்கு பாதுகாப்பானது திரையுலகம்"

## நடன இயக்குநர் ராதிகா பேட்டி

திரை உலகின் ஜாம்பவான்களான சிவாஜி, **எம்ஜிஆர், ஜெமினி கணேசன்,** MN **நம்பியார் ஆகியோருடன் வீரபாண்டிய கட்டபொம்மன், அன்ன மிட்ட கை, எங்கள் வீட்டுப்பிள்ளை, போன்று 500க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த பழம்பெரும் நடிகையான சீதாலட்சுமியின் மகளும்,** நான்கு வயதில் நடனம் ஆரம்பித்து 12 வயதில் அரங்கேற்றம் முடித்து, 15 வயதில் திரைத்துறையில் நடன உதவி இயக்குனராக அறிமுகமாகி, **ஆயிரத்திற்கும் மேற்பட்ட படங்களில் நடனமாடி, 500க்கும் மேற்பட்ட படங்களில் டான்ஸ் மாஸ்டராக பணியாற்றிக் கொண்டிருக்கும் பிரபல திரைப்பட நடன இயக்குனருமான ராதிகா மாஸ்டர்** அவர்களை திரை மொழி நேர்காணல் செய்தபோது அவர் பகிர்ந்து கொண்ட தகவல்கள் சில:

**கேள்வி:** அம்மா நடிகையாக இருக்கும் பொழுது, உங்களை நடனத் துறைக்கு எப்படி அனுப்பினார்கள்?

**பதில்:** அம்மாவுக்கு டான்ஸ் ரொம்ப பிடிக்கும். **அம்மா ராகினி பத்மினியோட பெரிய ஃபேன்..** அப்ப தில்லானா மோகனாம்பாள் ரிலீஸ் ஆன டைம். நலந்தானா, சாங் எனக்கு ஆட சொல்லிக் கொடுப்பாங்க. அம்மா தான் எனக்கு ஃபர்ஸ்ட் டீச்சர். அப்புறம் டீச்சர் வச்சு சொல்லிக் கொடுத்தாங்க. எனக்கு டான்ஸ்ல அதிகமா இன்ட்ரஸ்ட் இருக்கிறத தெரிஞ்சுகிட்டு ஒத்துக்கிட்டாங்க. அம்மாவுக்கும், அப்பாவுக்கும், சினிமாவுல இருக்கணும் அவ்வளவுதான்.

**கேள்வி:** அம்மா கூட நீங்க சூட்டிங் போய் இருக்கீங்களா?

**பதில்:** நிறைய போய் இருக்கேன். **எம்ஜிஆர் ஐயா மடியில உட்கார்ந்து சாப்பிட்டு இருக்கேன். அவரு எனக்கு சாப்பாடு ஊட்டி விட்டுருக்காரு. எங்க வீட்டுக்கும் வந்து இருக்காரு. சிவாஜி, ஜெமினி கணேசன் அவங்களோட சூட்டிங்கும் போயிருக்கேன். சிவாஜி, சங்கிலி முருகன், கவுண்டமணி, செந்தில், விஜயகுமார் எல்லாருமே எங்கள் வீட்டுக்கே வந்து சாப்பிட்டுட்டு போவாங்க.. அவ்வளவு நட்புடன் இருப்பாங்க..** அம்மாவோட மீன் குழம்பு, உப்பு கறி அவ்வளவு சுவையா இருக்கும். சமைச்சு எடுத்துட்டு போகாம ஒரு நாளும் அம்மா சூட்டிங் போனதில்ல.. **சிவாஜி ஐயா பார்த்தா என்ன சீதாலட்சுமி உப்புக்கறி வந்துருச்சன்னு கேப்பாரு..** அதே மாதிரி சிவாஜி ஐயா வீட்டில் இருந்தும் எப்பவுமே எல்லாருக்கும் சூட்டிங்குக்கு சாப்பாடு வரும். நம்பியார் ஐயாவோட வீட்ல இருந்தும் சாப்பாடு சூட்டிங்குக்கு வரும். இப்ப பிரபு அண்ணா வீட்ல இருந்தும் அதே மாதிரி தான் வருது, சாப்பிட வச்சு பாக்குறதுல்ல அவங்களுக்கு அப்படி ஒரு சந்தோஷம். ஏன்னா சினிமாங்கிறது ஒரு கூட்டு குடும்பம்.

**கேள்வி:** நீங்க முதன் முதலில் மாஸ்டர் டான்சரா நடிச்ச படம் எது?



**பதில்:** அரவிந்த்சாமி நடித்த **தாலாட்டு தான் முதல் படம்.** கலா அக்கா தான் அதுல மாஸ்டர் . அதுக்கப்புறம் அப்படியே கண்டினியூ பண்ண ஆரம்பிச்சிட்டேன்.

**கேள்வி:** நீங்க கிளாசிக்கல் டான்சர். சினிமான்னா? எல்லா டான்ஸும் தெரியணும். சினிமாவுக்குள்ள, சினிமாவுக்கு வெளியே யாரெல்லாம் உங்க மாஸ்டர்?

**பதில்:** சினிமாவுக்கு வெளியே ரெண்டு மாஸ்டர் இருக்காங்க.. உடுப்பி லட்சுமி நாராயணன் மாஸ்டர் கிட்ட பரதம், அனுராதா அக்காவோட அப்பா கிருஷ்ணகுமார் மாஸ்டர்கிட்ட western, சினிமாவுக்குள்ளன்னா... ஃபேமஸா இருந்த சம்பத் ராஜ் மாஸ்டர் கிட்ட வெஸ்டர்ன் கத்துக்கிட்டேன்..

**கேள்வி:** நீங்க டான்ஸ் அசிஸ்டென்டா இருக்கும்போது நிறைய ஆர்டிஸ்ட் படங்கள் நடித்து இருப்பீங்க அதுல சிலது நினைவு கூறுங்கள். பதில் அப்ப நான்பிஸி டான்சர். ரஜினி சார் கமல் சார் விஜய் சார் அஜித் சார் சூர்யா சார் இப்படி நிறைய பேமஸ் நடிகர்கள் கூட நான் ஒர்க் பண்ணி இருக்கேன். அதுல குறிப்பா படையப்பா படத்துல **எம்பேரு படையப்பா இளவட்ட நடையப்பா சாங்ல நான் கல்யாணப் பெண்ணா நடிச்சிருப்பேன்.** அதுக்கப்புறம் எனக்கு ஆறு மாசத்துல கல்யாணம் ஆயிடுச்சு படையப்பா அருள்ல. அப்ப நான் தருண் மாஸ்டர்கிட்ட வொர்க் பண்ணிட்டு இருந்தேன். கமல் சாரோட ஆளவந்தான் படத்துல ஒர்க் பண்ணேன் அப்புறம் அவரோட



பஞ்சதந்திரம் படத்துல **"வந்தேன் வந்தேன்** "என்ற காம்பெடிஷன் சாங்ல பிருந்தா அக்கா கிட்ட அசிஸ்டென்டா ஒர்க் பண்ணேன். அதுக்கப்புறம் விஜய் சாருக்கு எக்கச்சக்கமாக சாங் பண்ணி இருக்கேன். யூத் படத்துல **ஆல்தோட்ட பூபதி,** குஷில **பாப்பு** சாங்கு இப்படி நிறைய பண்ணி இருக்கேன் . ஜெமினி படத்துல **ஓ போடு** சாங்ல டான்ஸ் பண்ணி இருக்கேன் இப்படி 90ஸ் பேட்ச்ல நான் நிறைய படங்களுக்கு டான்ஸ் பண்ணி இருக்கேன். கேள்விஅப்ப இருந்த டாப் கொரியாகிராபர் யார் யார் கிட்ட நீங்க ஒர்க் பண்ணி இருக்கீங்க? பதில் பிரபுதேவா சார் ராஜூ சார் சம்பத்ராஜ் மாஸ்டர் பாலாஜி மாஸ்டர் கலா அக்கா சிவசங்கர் மாஸ்டர் ஷாம் மாஸ்டர் தீனா மாஸ்டர் கரண் மாஸ்டர் லாரன்ஸ் அண்ணா இப்படி நிறைய மாஸ்டர் கிட்ட நான் ஒர்க் பண்ணி இருக்கேன்.

**கேள்வி:** நீங்க பேமஸ் டான்ஸரா இருந்திருக்கீங்க. இருக்கீங்க உங்களுக்கு நடிக்க ஆஃபர் வரலையா?

**பதில்:** நிறைய வந்துச்சு ஆனா நான் நடிக்கல. நான் டான்ஸ்ல ரொம்ப பிஸியா இருந்தேன். அது மட்டும் இல்ல எனக்கு டான்ஸ் தான் ரொம்ப இன்ட்ரஸ்ட் அதனால நான் நடிப்புல கவனம் செலுத்த முடியல. ஆனாலும் அப்பப்ப சில படங்களில் சின்ன சின்ன ரோல்ல நடிச்சுகிட்டு தான் இருக்கேன். வீரமும் ஈரமும் படத்துல நடிச்சிருக்கேன்.

**கேள்வி:** மிஸ்கின் சார் உங்கள டான்ஸ் மாஸ்டரா ஆக்கும் போது உங்களுக்கு என்ன மனநிலை இருந்தது?

**பதில்:** ஆக்சுவலா ரொம்ப குழப்பமா இருந்துச்சு. மாஸ்டரா ஆகணுமா? ஆக வேணாமான்னு? யூத் படத்துல மிஷ்கின் சார் அசிஸ்டென்டா இருந்தாரு. நான் அதுல ஆல்தோட்ட பூபதி சாங்குல டான்ஸ்ஸரா இருந்தேன். நான்

துரு துருனு இருந்தத பாத்து அப்பவே அவர் சொன்னாரு **நான் டைரக்டர் ஆனா உன்னை மாஸ்டராக ஆக்கறேன்னு. அவர் சொன்ன மாதிரியே என்ன "முகமூடி" படத்துல டான்ஸ் மாஸ்டரா அறிமுகப்படுத்தினார்.** என்ன விட என்ன அதிகமா நம்புனது மிஸ்கின் சார்தான். வாய மூடி சும்மா இருடா என்ற சாங்குல என்ன மாஸ்டர் ஆக்கிட்டாரு ஆனா அவரு கிட்ட தான் சினிமாவ அணு அணுவா கத்துக்கிட்டேன் **ஆக்சுவலா என்னுடைய சினிமா ப்ரொபசர் அவர்தான். நமக்கு தெரிஞ்சதெல்லாம் சாங்குல வைக்க கூடாது அந்த சாங் என்ன கேக்குதோ அதுக்கு தான் நாம டான்ஸ் பண்ணனும் அப்படின்னு எனக்கு சொல்லிக் கொடுத்தார்.** அதனால என்னைக்குமே நான் அவருக்கு நன்றி கடன் பட்டிருக்கேன்.

**கேள்வி:** நடிகர் ஜீவா சாரோட ஒத்துழைப்பு எப்படி இருந்துச்சு?

**பதில்:** புதுசா ஒரு லேடி மாஸ்டர் சொல்லிக் கொடுத்து நாம டான்ஸ் பண்ணனுமா அப்படின்னு அவர் நினைக்கவே இல்லை என்ன பாத்து மாஸ்டர் வாங்க நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படி நான் டான்ஸ் பண்றேன்னு நான் சொல்றத அழகா கேட்டு டான்ஸ் பண்ணினார் ரொம்ப அற்புதமான மனிதர்.

**கேள்வி** முகமூடிக்கு அடுத்து வேற என்ன படம் உங்களுக்கு வந்தது

**பதில்:** மரியான். தனுஷ் சாரும் பெரிய ஜாம்பவான். அடுத்து நான் பண்ண பத்து படங்களும் பெரிய டைரக்ட்டர்ஸ் பெரிய ஹீரோஸ் பெரிய மியூசிக் டைரக்டர்ஸ் படங்கள் தான். காட் கிரேசி.

கேள்வி: டான்ஸ் ஸ்கோப் உள்ள ரோமியோ ஜூலியட் படத்துல உங்க அனுபவத்தை சொல்லுங்க?

**பதில்: "இதற்குத்தானே ஆசைப் பட்டாய்.."** சாங் பண்ணேன். அப்புறம் படத்தோட எண்ட்ல பெரிய குரூப்ஸ் வைத்து ஒரு சாங் பண்ணேன். ஜெயம் ரவியும் ஹன்சிகா மோத்வானியும் ரொம்ப அழகா டான்ஸ் பண்ணி இருப்பாங்க. டைரக்டர் லட்சுமணன் சார் ரொம்ப சப்போர்ட் பண்ணாரு. ஆக்சுவலா நான் ப்ரொடியூசர் நந்தகோபால் சாருக்கு தான் நன்றி சொல்லணும் அவ்வளவு பெரிய சாங் எனக்கு கொடுத்ததுக்கு. இப்ப ஜெயம் ரவி சாருக்கு நான் ஜீனின்னு ஒரு படம் பண்ணிட்டு இருக்கேன் ஜெயம் ரவி சார் ரொம்ப கூல்.

**கேள்வி:** இயக்குனர் சீனு ராமசாமி யின் மாமனிதன் பற்றி?

**பதில்:** சீனு அண்ணா திரைக்கு உள்ளேயும் வெளியே நடிக்க தெரியாத மனிதர். எனக்கு அவர் அண்ணன்






மாதிரி. விஜய் சேதுபதி சார் படத்தில் வொர்க் பண்றதுக்கு கொடுத்து வச்சிருக்கணும். சீனு அண்ணா விஜய் சேதுபதி சார் கேமரா மேன் சுகுமார் சார் மூணு பேருடைய பாண்டிங் ரொம்ப அழகா இருக்கும். மாமனிதன், "ஆரஞ்சு மிட்டாய்" "தர்ம துரை" போன்ற நிறைய படங்கள் விஜய் சேதுபதி சார் படத்தில் வொர்க் பண்ணி இருக்கேன்.

**கேள்வி:** தாரை தப்பட்டை படத்துல உங்க அனுபவம்

**பதில்:** பாலா சார் டெக்னீசியன்களை அவர் நினைக்கிற கதைக்குள்ள கூட்டிக்கொண்டு போய் விடுவார். எனக்கு கதையை பத்தி சொல்லி, சாங்க பத்தி விளக்கி வாய்ப்பு கொடுத்தார். முதல் முதலா சசிகுமார் சார ரிகர்சலுக்கு வரும்போது பார்த்தேன். கொஞ்சம் பயமா தான் இருந்துச்சு. தயங்கி பேசினேன் உடனே அவரு "மாஸ்டர் இந்த இடத்தில் நான் ஸ்டூடண்ட். நீங்க மாஸ்டர் .நீங்க சொல்றத நான் செய்றேன் சொல்லுங்க" ன்னாரு. அப்புறம் ரிகர்சல் கொடுத்தேன் தொடர்ந்து ஒரு 20, 25 நாள் கிராமிய கலாச்சார டான்ச அழகா கத்துக்கிட்டு, சிறப்பாக நடிச்சாரு. வரலட்சுமி சரத்குமார் வெரி குட் டான்ஸர் ஈசியா பண்ணிட்டாங்க.

**கேள்வி:** இவங்க பேரை சொன்னதும் உங்க நினைவுக்கு வருவத சொல்லுங்க

**கேள்வி** மிஸ்கின் சார்?

**பதில்:** பிரேம் பில்லிங் அவர் கிட்ட கத்து கிட்டேன்.

**கேள்வி:** பாலா சார்?

**பதில்:** பர்பெக்சன்.

**கேள்வி:** சசிகுமார் சார்?

**பதில்:** என் ஃபேவரிட் ஹீரோ அண்ட் டைரக்டர். சசிகுமார் சார் அதையும் தாண்டி அற்புதமான மனிதர்.

**கேள்வி:** சமுத்திரக்கனி சார்?

**பதில்:** டைரக்டர் சொல்றத அப்படியே கேப்பாரு. அதை கத்துக்கிட்டேன்.

**கேள்வி:** பரத் பாலா?

**பதில்:** கம்யூனிகேஷன் எப்படி இருக்கணும், எப்படி பண்ணனும்னு கத்துக்கிட்டேன்.

**கேள்வி:** தாமிரா சார்?

**பதில்:** என் குடும்பத்தில் ஒருத்தர். அவர நினைத்தால் கண் கலங்குது. அவர அவ்வளவு மிஸ் பண்றேன்.

**கேள்வி:** லட்சுமண் சார்?

**பதில்:** பிளானிங் கரெக்டா பண்ணுவார்.

**கேள்வி:** சுராஜ் சார்?

**பதில்:** டென்ஷனாக மாட்டார். எல்லாத்தையும் ரொம்ப ஈஸியா எடுத்துக்குவாரு.

**கேள்வி:** முத்தையா சார்?

**பதில்:** விரும்மன் படத்தில் ஒரு சின்ன போர்ஷன் ஒர்க் பண்ணேன். ஹீரோ ஓபனிங் சாங் கொடுங்கன்னு உரிமையா கேட்டு இருக்கேன். கண்டிப்பா அடுத்த படத்துல தரேன்னு சொல்லி இருக்கார்.

**கேள்வி: உங்க மேரேஜ்க்கு டான்ஸ் மாஸ்டருங்க சீர் செஞ்சாங்களாமே?**

**பதில்: ஆமா என் டான்ஸ்ர்ஸ் அண்ணனுங்க அத்தனை பேரும் எனக்கு சீர் செஞ்சாங்க. ஆசாத் அண்ணன் பீரோ வாங்கி கொடுத்தாரு. ஒரு அண்ணன் கட்டில் வாங்கிதந்தாரு. ஒரு அண்ணன் நகை வாங்கி கொடுத்தாரு. எங்க தருண் மாஸ்டர் அண்ணன் "உங்க அப்பா வீட்டு சீர் இதுன்னு 10 சவரன் செயின் போட்டார். அத இப்ப நினைச்சாலும் பெருமையா, நெகிழ்ச்சியா இருக்கு டான்சர்ஸ் பொருத்தவரைக்கும் எல்லாரும் ஒரு ஃபேமிலி தான்.**

**கேள்வி:** கின்னஸ் ரெக்கார்ட் எப்படி வாங்கினீங்க?

**பதில்:** இரண்டு வருடம் திட்டமிட்டு, ஒரு வருடம் முழுக்க முதல் நாள் ஒரு டான்ஸர், இரண்டாம் நாள் இரண்டு டான்ஸ்ஸர்ஸ், இப்படி **365 நாளும் 365 டான்சர்ஸ்ங்கள ஆட வச்சி கின்னஸ் ரெக்கார்டு செஞ்சோம். இதுக்கு முழுக் காரணம் ஆர்.கே ராமநாராயணன் சார்தான்** .அவரு ★ஸ்கூல் கேம்பஸ் ★ னு ஒரு படம் தயாரித்து இயக்கினார் அந்த படத்தில் நான் அவருக்கு வைஃபா நடிச்சிருக்கேன். அவர் தான் பரத நாட்டியம் டான்ஸ் ஈவென்ட் ரெடி பண்ணி அத இயக்க என்கிட்ட கொடுத்தாரு. பிளானிங் எல்லாம் அவரது அதை ஒருங்கிணைச்சு டான்ஸ் ஆட வைத்தது நான். அவருக்கு இப்பவும் என் நன்றிய சொல்லிக்கிறேன்.

**கேள்வி:** பெரிய பட்ஜெட் படம் உங்களுக்கு பிரீடம் இருக்கும், சின்ன பட்ஜெட் படம் ஒரு நாள் ரெண்டு நாள்ல songக முடிக்கணும்னு சொல்லுவாங்க. அது எப்படி எதிர்கொள்றீங்க?

**பதில் :** தீயா வேலை செய்யணும்னு சொல்லுவாங்கில்ல அப்படி வேலை பார்க்கணும். பெரிய படம் பண்ணும் போது சொல்லிக் கொடுக்க, யோசிக்க, சூட் பண்ண டைம் இருக்கும். பட்ஜெட்டும் இருக்கும். ஆனால், சின்ன பட்ஜெட் படம்னா ஒரு நாள் ரெண்டு நாள்ல எடுத்தாகணும் அதுல பெஸ்ட் கொடுக்கணும் **சின்ன பட்ஜெட் படங்களுக்கு நான் பேப்பர் ஒர்க் நிறைய பண்ணுவேன். பெரிய படங்களில் பட்ஜெட்ட நம்பி போவேன்.** சின்ன படங்களுக்கு என்ன நம்பி போவேன் எல்லாத்தையும் எடிட்டிங் பாயிண்ட்ல ஒர்க் பண்ணுவேன் அதனாலதான் நான் ரொம்ப சாட் **பீரியடில 400 படங்களுக்கு மேல மாஸ்டரா ஒர்க் பண்ணி இருக்கேன்.** அதுல 25 படங்கள் தான் பெரிய பட்ஜெட் படம் மீதி எல்லாம் சின்ன பட்ஜெட் படங்கள் தான். பட்ஜெட்ல பண்ற அத்தனை இயக்கு

பக்கம் 8ல் தொடரும்

பக்கம் 7ன் தொடர்ச்சி

நர்களுமே என்ன அப்படி நம்பி தான் கூப்பிடுறாங்க. இதுல நான் ரொம்ப பயந்து ஒர்க் பண்ண படம்னு பாத்தா **மேகா படந்தான். “புத்தம் புது காலை...”** இதை விசுவலா எடுத்து கொண்டு வாங்க எப்படி இருக்குன்னு பார்த்துட்டு நான் பர்மிஷன் தரேன்னு இளையராஜா சார் சொல் லிட் டாருன்னு **இயக்குநர் ரிஷி கார்த்திக்** சொன்னாரு. அதனால பயத்தோட ஒர்க் பண்ணோம் **கேமரா மேன் குரு** ரொம்ப பிரமாதமா பண்ணாரு. ஸோ அது பெரிய ஹிட் டானது உங்களுக்கே தெரியும்.

**கேள்வி:** சினிமாவுல பெண் களுக்கு பாதுகாப்பு எப்படி இருக்கு?

**பதில்:** நாங்க பார்ப்பதற்கு மட்டும் தான் பெண்களாக இருப்போம். ஸ்பாட்ல பத்து ஆண்களோட ஆவி எங்க உடம்புல பூந்துரும் அப்படி ஒர்க் பண்ணுவோம். **எனக்கு பொண்ணு பொறந்திருந்தா 200% சினிமாவுக்கு தான் அனுப்பி இருப்பேன். ஃபுல் அண்ட் ஃபுல் செக்யூர் சினிமாவில் தான் இருக்கு. நான் 13 வயதிலிருந்து சினிமாவில் இருக்கேன் சினிமாவுல இருக்குற ஒரு ஆம்பள கூட தப்பானவங்க கிடையாது .சினிமா ஆம்பளைங்க பர்மிஷன் இல்லாம கைய கூட தொட மாட்டாங்க. சினிமாவ தப்பு சொல்லவே மாட்டேன். பெண்களுக்கு முழு பாதுகாப்பானது சினிமா.**

**கேள்வி:** புதுசா வர்ர டான்சர்ஸ் பத்தி?

**பதில்:** ரொம்ப டேலண்ட்டா இருக்காங்க. நான் தான் அவங்க கிட்ட போட்டி போட புதுசா கத்துக் கிட்டு இருக்கேன்.

**கேள்வி:** உங்க எதிர்கால திட்டம்?

**பதில்:** எப்போதுமே சினிமாவுல தான் இருப்பேன். விரைவில் ஒரு படத்தை இயக்குவேன்.

சினிமாவை சிறுவயது முதலே நேசித்துக்கொண்டிருக்கும் மாஸ்டர் ராதிகா அவர்கள் படம் இயக்கி இன்னும் பல சாதனைகள் செய்ய திரை மொழி சினிமா மாத இதழ் சார்பாக வாழ்த்துக்கள் கூறி விடை பெற்றோம்.



**R.சுப்ரமணிய பாரதி**
**திரைமொழி ஆசிரியர், வெளியீட்டாளர்**
**தொடர்புக்கு: 9566153766**






















2015 – ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா 06.03.2024 அன்று சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ்ப் பேரவை. டி.என்.ராஜரத் தினம் கலை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமை ஏற்று விருதுகள் வழங்கினார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்




மா.சுப்பிரமணியன், துணை மேயர் – மகேஷ்குமார், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் – தவேலு, செய்திமக்கள் தொடர்புத்துறை இயக்குனர் – இரா. வைத்தியநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பக்கம் 3ன் தொடர்ச்சி

ஒரு பெருவெடிப்பு *(Explosion)* ஏற்படும். சுனாமி போல புதுப்புது உருவாக்கங்களும், வருமான வாய்ப் புகளும் பாய்ந்துவரும். அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள படைப்பாளிகளும், முதலீட்டாளர் களும் இப்போதே தயாராக வேண்டும், என்றார்.

உதாரணமாக மஞ்ஜும்மல் பாய்ஸ் பார்த்தவுடன் கல்லூரி காலத் தில் நீங்கள் சென்ற குணாகுகை புகைப்படங்கள் ஞாபகம் வரும். உடனே அதை இன்ஸ்டாவில் பதிவு செய்துவிட்டு நூறு லைக் வாங்கி திருப்தி அடையக் கூடாது. உங்கள் குணா குகை சாகசப் பயணம் பற்றி ஃபேஸ்புக் *Post*, இன்ஸ்டா *Reel*, யு டியூப் *Shorts*, எக்ஸில் ஒரு *Tweet*, வேர்டுபிரஸ் *Blog*, வாட்ஸ்அப் *Sto ry*, ஆடிபிள் *Podcast*, ஒரு *shortfilm*, பத்திரிகைகளில் ஒரு *Infographics*, அமேசான் கிண்டிலில் *Ebook*, டிக்டாக் *meme*, சாகசப் பயணம் செய்வது எப்படி என்று யுடமியில் *Online Course*, ஓடிடிக்கு *webseries*, பெரிய திரைக்கு *Screenplay* என விதவிதமாக அவற்றை பலவடிவங்களில் *(Vari ety of Contents)* மாற்ற வேண்டும். அதற்கான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அவர்களுடன் இணைந்து செய்ய வேண்டும். *You should create maximum impact across media and entertainment.* எழுத்து, வீடியோ, ஆடியோ என ஒரே விதமான வடிவச்சிக்கல்களில் *(Format Constraints)* இருந்து மீள வேண்டும்.

அடுத்த பாராவை நிச்சயமாக நீங்கள் படிக்க முடியாது. வேண்டுமென்றே வார்த்தைகளை கலைத்துப் போட்டிருக்கிறேன். ஏ.ஐ பற்றிய அச்சம் மற்றும் தெளிவு பற்றி இந்தப் பாராவில் இருக்கிறது. கலைந்த வார்த்தைகளை அடுக்கித்தரும்படி *chatGPT* மற்றும் ஜெமினி ஏ.ஐ ஆகிய இரு செயலிகளிடமும் கொடுத்தேன். அழகாக அடுக்கிக் கொடுத்துவிட்டன.

தொடரும்

Thiraimozhi Talkies

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI.** Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**